செய்தி வெளியீடு எண்: 60-2018 நாள்: 30.06.2018

விழுப்புரம் மாவட்டத்தில் பண்ணைக்குட்டைகளை பனரமைக்க ஆகும் செலவினத்தொகையில் 50 சதவீதம் மானியம் அடிப்படையில் மீன்பண்ணையை சீரமைக்க விருப்பமுள்ள பண்ணை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் (MNERGA) கீழ் 2012-2013ம் ஆண்டில் அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டைகளை புனரமைக்க ஆகும் செலவினத்தொகையில் 50 சதவீதம் மானியம் அடிப்படையில் மீன்பண்ணையை சீரமைக்க விருப்பமுள்ள பண்ணை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. ஒரு ஹெக்டேர் அளவிலான மீன்பண்ணையினை புனரமைக்க ஆகும் செலவினத்தொகை ரூ.3.50 லட்சத்தில் 50 சதவீத மானியம் ரூ.1.75 இலட்சம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் பண்ணை உரிமையாளர்/ விவசாயிகளிடமிருந்து அதிகம் பெறப்படின் முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ள பண்ணை உரிமையாளர்கள் 15 தினங்களுக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், விவரங்களுக்கு மீன்வள உதவி இயக்குநர், எண்.10, நித்தியானந்தம் நகர், வழுதரெட்டி, விழுப்புரம் - 605 401 தொலைபேசி எண்.04146 259329 என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தினை அலுவலக வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொண்டு உரிய விவரம் பெற்று பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.